[1979 மார்ச் 20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே கொடைக்கானலைத் தனி மாவட்டமாக்கி மலைப் பிரதேசத்தை மேம்பாடு செய்யும் திட்டம் அரசு ஆலோசனையில் உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு, இல்லை என்பது என்னுடைய பதில்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நமது நாட்டில் பல்வேறு மாநிலங்கள் மொழி வழி அடிப்படையில் அமைந்து, தற்போது செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் மாநிலத்திலே அந்தந்த பகுதி மக்கள் வாழக்கூடிய கலாச்சாரம், நடையுடைப் பாவனைகள் அடிப்படையைக் கொண்டு, அதை ஒரே பகுதியாக அதாவது ஒரே விதமான கலாச்சாரம், நடையுடைப் பாவனைகளைக் கொண்ட மக்கள் வாழக்கூடிய பகுதிகளை ஒன்றாக இணைத்து செயல்படுத்தும் செயற் குறிப்பு இருக்கிறதா? அந்த அடிப்படையில் கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, பழனியையும் கரூரையும் கோவை மாவட்டத்தோடும் ஈரோடு மாவட்டத்தோடும் சேர்க்கும் திட்டம் இருக்கிறதா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இது கொடைக்கானல் பற்றிய கேள்வியே தவிர கும்பகோணம் பற்றியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் மேம்பாட்டு திட்டத்திற்கு வெஸ்டர்ன் காட் டெவலப்மென்ட் ஸ்கீமிலேயிருந்து இதுவரை என்னென்ன செய்திருக்கிறார்கள்? இனிமேல் என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி மாவட்டத்தைப் இரண்டாக ஆக்குவது பற்றியது. ஆகவே என்னென்ன திட்டங்கள் என்பதற்கு தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களுக்கு வரி விதிப்பு.

வினா எண் 483— திரு. என். கிட்டப்பா : திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஓட்டல்களில் உணவுப் பண்டங்களில் விலையுடன் வரியையும் சேர்த்து வசூல் செய்வதைத் தடை செய்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஓட்டல்களில் வரி வசூல் செய்யாமல் இருக்க வேண்டுமென்று அவர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அரசு அதைப்பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்போது மத்திய அரசின் கீழ் வந்தாலும், மாநில அரசின் கீழ் வந்தாலும், உணவுப் பொருள்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களின் விலை தற்போது ஓரளவு குறைந்திருக்கின்றது. ஆகவே அப்படி குறைந்திருக்கின்ற நிலையிலே கூட ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை மிக அதிகமாக இருக்கின்றது. அவர்கள் விலையினை ஏற்றிக் கொண்டே போகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு முன் வருமா? இப்போது சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் கூட மாட்டிக் கொண்டிருக்கிறோம். அதாவது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடத்தப்படும் ஓட்டலில் கூட உணவுப் பண்டங்களின் விலை மிக அதிகமாக இருக்கின்றது. ஆகவே அரசு அதையாவது தடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு உணவு இலாக்காவிடம் இருக்கிறது. இந்த இலாக்காவைப் பொறுத்தவரை வரி போடுவது மட்டும் தான். ஆகவே இதைப் பற்றிய கேள்விகள் கேட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே' ஓட்டல்களில் விற்கக் கூடிய பொருள்களின் மொத்த அளவைப் பொறுத்தும் மொத்த தொகை அடிப்படையிலும் ஏ.பி.சி. என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. இதிலே 'ஏ' பிரிவு ஓட்டலில் விற்கப் படுகின்ற காபி கூட 40 பைசா 50 பைசா என்று இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஓட்டல்களிடத்திலிருந்து விற்பனை வரி வசூல் செய்வதைக் கூட உச்சநீதி மன்றம் தடை செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இப்போது விற்பனை வரி வசூல் செய்யப்படவில்லை. காரணம் என்னவென்றால் உச்ச நீதிமன்றம் தடை போட்டிருக்கிறது. அப்படி வசூல் செய்யாததன் காரணத்தால் தமிழக அரசுக்கு 2 கோடி ரூபாய் வரவில்லை. ஆகவே இதற்குப் பரிகாரம் தேடுகின்ற வகையில் நாம் வழக்கிற்குச் செல்வதாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 20

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும்போது இந்த விற்பனை வரி இருப்பதைப் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது அன்றைக்கு இங்கிருந்த மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் அப்படி வசூல் செய்யக் கூடாது என்று கட்டளையிட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் ஓட்டல் முதலாளிகள் இன்றைக்கு மீண்டும் இந்தப் பிரச்சினையை எழுப்பி இருப்பதாகக் கூறப்படுகிறதே, இது என்ன விஷயம் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வரி விதிப்பு பற்றிய பிரச்சினை வந்தபோது மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு அமைச்சரவர்களும் பேசிய குறிப்புகளை எல்லாம் நான் பார்த்தேன். அப்போது பேசியது உணவு அமைச்சர் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது பல உறுப்பினர்கள் ஓட்டல்களுக்கு விற்பனை வரி போடக்கூடாது என்று பேசி இருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் விற்பனை வரி இருக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். முடிவில் அப்படி விற்பனை வரி போட்டது சரி என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குப் பிறகு போடப்பட்ட வரியைக் கொடுக்க முடியாது என்று சொல்லுகின்ற அளவிலே ஓட்டல் அதிபர்கள் உணவு தங்குகின்றவர்களுக்குத்தான் பரிமாறப்படுகிறது, ஆகவே வரி விதிக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் வரி விதிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறது. இந்த உத்தரவை எதிர்த்துத்தான் நாம் வழக்காடிக் கொண்டிருக்கிறோம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே ஓட்டல்களில் பரிமாறப்படுகின்ற உணவுகளுக்கு விதிக்கப்படுகின்ற வரியைப் பொறுத்தவரையில், சிலர் நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்றதின் காரணமாக வரி விதிக்கப்படுவது நிறுத்தப்பட்டிருப்பதாக சொன்னார்கள். ஐந்து ரூபாய் வரி என்று கொடுத்து விடலாம். ஆனால் வரி விதிக்கக் கூடாது என்று வந்த பிறகு 25 பைசா வடையை 35 பைசாவாகவும், 40 பைசா பூரியை 50 பைசாவாகவும், 50 பைசா என்றிருந்த தோசையை 60 பைசாவாகவும்—இப்படி உணவுகளின் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதை தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ? இப்படி விலை உயர்த்துபவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தமிழக அரசின் சார்பில் உணவு அமைச்சர் அவர்கள் உணவு உற்பத்தியாளர்களையும், பெரிய உணவு விடுதிகளின் சொந்தக்காரர்களையும் அழைத்து ஓட்டல்களில் தரமுள்ள உணவு பரிமாறப்

1979 மார்ச் 20]

பட வேண்டும் என்றும், விலையை உயர்த்தாமல் இருக்க வேண்டும் என்றும் அவர்களிடம் பேசியிருக்கிறார்கள். அவர்களும் அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி குறைபாடு இருந்தால் அதை நீக்குவதற்கு உணவு அமைச்சர், அவர்கள் முயற்சி செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: வருடத்திற்கு ஐந்து லட்சத்திற்கு மேல் வசூலாகக் கூடிய ஓட்டல்களை எல்லாம் 'எ' வகுப்பு ஓட்டல்கள் என்று பிரித்து, அவர்கள் எல்லாம் குறிப்பிட்ட இன்ன விலைக்கு குறைவாக உணவுப் பண்டங்களை விற்கக் கூடாது என்ற தடை இருக்கிறதாமே, அப்படியென்றால் அப்படி இருப்பது நியாயம் தானா? இப்படி குறைந்த விலையில் விற்கக் கூடாது என்றிருப்பதை தளர்த்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் உணவு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லுவார்கள்.

விடுதலை பெற்ற ஆயுட்கால சிறைவாசிகள்.

* வினா எண் 484—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் 1977–78-ம் ஆண்டில் சிறை அதிகாரிகளின் அறிவுரைக் கழகத்தினரால் விடுதலை செய்யக் கோரி பரிந்துரை செய்யப்பட்ட ஆயுட்கால சிறைவாசிகள் எத்தனை பேர்?

(ஆ) அதில் இதுவரை எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

The Hon. Thiru. NARAYANASWAMY ; (a) Four hundred and thirty one persons.

(b) One hundred and six persons.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையை பரிந்துரை செய்திருந்ததில் சிலர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலரை விடுவிக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. இதற்கான காரணத்தை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்: மேலும் ஆயுட்கால தண்டனை பெற்று திருச்சி மத்திய சிறைச்சாலையில் இருக்கின்ற சலவைத் தொழிலாளியான சிந்தாமணி என்கிற ரங்கசாமி என்பவர் 15 ஆண்டுக் காலம் 16 ஆண்டு காலம் சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார். இதுவரை